செ.வெ.எண்.128/2018 நாள்: 27-03-2018

**காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.46 லட்சத்து 23 ஆயிரத்து 500 மதிப்பில் 100 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் 54 நபர்களுக்கு விலையில்லா வெள்ளாடுகளையும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கம்மராஜபுரம், இளையனார் வேலூர் மற்றும் காவாந்தண்டலம் ஊராட்சிகளில் ரூ.39 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பில் 100 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்களும் மற்றும் ரூ.6 லட்சத்து 88 ஆயிரத்து 500 மதிப்பில் 54 நபர்களுக்கு விலையில்லா வெள்ளாடுகளையும் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் பேசியதாவது, கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டமானது கிராமப்புற தாய்மார்களின் பொருளாதாரத்தை முன்னேற்றமடைய செய்வதற்கு மறைந்த முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த உன்னதமான திட்டமாகும். இத்திட்டமானது தாய்மார்கள் சுயமாக, யாருடைய உதவியுமின்றி, தானாகவே வருவாய் ஈட்டி, தனது குடும்பத்தை வளப்படுத்த இப்படியொரு திட்டத்தை அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இத்திட்டமானது இந்தியாவில் மட்டுமின்றி, உலகத்திலேயே எந்தவொரு அரசியல் கட்சித் தலைவரும் கொடுத்திடாத திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற தாய்மார்கள், கறவை மாடுகள் மூலம் ஒருநாளைக்கு காலை மற்றும் மாலை இருவேளையும் சேர்த்து 7 லிட்டர் பால் கிடைப்பதாகவும், அதன் மூலம் தனது குழந்தைகளுக்கு கல்வி செலவும், குடும்பச் செலவும் செய்ய முடிகிறது என்றும், குறிப்பாக பெண் பிள்ளைகளை திருமணம் செய்து வைக்க உதவியாக இருக்கிறது. மேலும் ஒரு பயனாளிக்கு கொடுக்கும் 4 வெள்ளாடுகள் 3 ஆண்டுகளில் 30 முதல் 40 ஆடுகளாக இனப்பெருக்கம் ஆகிறது. அதில் ஒரு பகுதியை விற்பனை செய்து ஏழை தாய்மார்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற முடிகிறது என கூறியுள்ளனர். எத்தனையோ நிதி நெருக்கடியிலும் இத்திட்டதினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து ஏழை-எளிய மக்களுக்காக செய்து வருகிறார் என கூறினார்.

முன்னதாக வாலாஜாபாத் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் ஓராண்டு சாதனையை விளக்கும் புகைப்பட கண்காட்சியை மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திறந்து வைத்து பார்வையிட்டார். செய்தித்துறையின் மின்னணு விளம்பர வாகனம் மூலம் ஓராண்டு சாதனை செய்திமலர் ஒளிபரப்பப்பட்டதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகம்மது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வாலாஜாபாத் திரு.பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், திருமதி.மைதிலி திருநாவுக்கரசு, கால்நடை துறை மண்டல இணை இயக்குநர் திரு.சுந்தரராஜ்,வாலாஜாபாத் பேரூராட்சி திருமதி.இரா.சுமா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

செய்தி வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.